DEPOSITION OF WITNESS
(Chapter XXV of BNSS)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANNIYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 243/2024

Prosecution Witness - P.W. 9

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. சுனிதா |
| Father's Name | : | க/பெ. லெட்சுமணன் |
| Village | : | மருதங்கோடு |
| Taluk | : | விளவங்கோடு |
| Calling | : | House Wife |
| Age | : | 49 |
| Date | : | 23.09.2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.09.2025.

(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.)

23.09.2025

**முதல் விசாரணை:-**

நான் கோட்டவிளை மருதங்கோட்டில் வசிக்கிறேன். எனது கணவர் 5 வருடங்களுக்கு முன்னர் இறந்துவிட்டார். ஆஜர் எதிரியை தெரியும். அளப்பங்கோடு ஈஸ்வரகால பூதத்தான் கோவிலுக்கு கிழக்கே ரப்பர் தோட்டம் எனக்கு சொந்தமாக உள்ளது. அதன் விஸ்தீரணம் 32 ½ சென்ட். 2022 ல் ஆஜர் எதிரிக்கு அந்த ரப்பர் தோட்டத்தை 2 வருட காலத்திற்கு பால் வெட்டுவதற்கு வருடத்திற்கு ரூபாய் 15,000/-

ற்கு அனுமதி கொடுத்திருந்தேன். அதற்கு எழுத்து மூலமாக எந்த ஆவணமும் இல்லை. அந்த அனுமதியின் படி அவர் ரப்பர் மரங்களிலிருந்து பால் வெட்டிக் கொண்டிருந்தார். நவம்பர் 2023 வரையில் வெட்டிக் கொண்டிருந்தார். 28.11.2023 அன்று போலீசார் என் வீட்டிற்கு வந்தார்கள். அந்த ரப்பர் விளையில் நகைகள் புதைத்து வைக்கப்பட்டிருக்கிறது என்றும், அந்த ரப்பர் விளை என்னுடையதுதானா என்று கேட்டார்கள். ரப்பர் விளை என்னுடையது என்று சொன்னேன். அந்த நகை புதைக்கப்பட்டிருப்பதை பற்றி எனக்கு தெரியாது என்று சொன்னேன். எதிரி அருள்சுரேஷ் தான் நகையை புதைத்திருப்பதாக போலீசார் சொன்னார்கள். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :-</u>**

கோட்டவிளை என்பது மேல்புறத்திற்கும், கழுவந்திட்டைக்கும் இடையில் உள்ளது என்றால் சரிதான். நான் சொல்லும் அளப்பங்கோடு என்பது அன்டுகோடு என்ற பகுதி உள்ளது, இடைக்கோடு பேரூராட்சிக்குட்பட்டது என்றால் சரிதான். என் வீடு இருப்பது மருதங்கோடு ஊராட்சி என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கும், அந்த விளைக்கும் இடையே சுமார் 6 கிலோ மீட்டர் தொலைவு இருக்கும் என்றால் சரிதான். எங்கள் விளையை சுற்றி கருங்கல்லில் காம்ப்வுண்ட் கட்டியுள்ளோம் என்றால் சரிதான். அந்த விளை ரோடு மட்டத்திலிருந்து 5 அல்லது 6 அடி பள்ளமாக இருக்கும் என்றால் சரிதான். அந்த விளையில் இருக்கும் மரங்களில் எத்தனை வருடங்களாக பால் வெட்டி வருகிறோம் என்றால் எதிரிக்கு கொடுப்பதற்கு முன்பு 7 வருடங்களாக வெட்டிக் கொண்டிருந்தோம். எத்தனை ஷீட்டுக்கள் கிடைக்கும் என்றால் 4

ஷீட்டுகள் கிடைக்கும். நாங்கள் வெட்டிக் கொடுக்கும்போது ஷீட்டிற்கு எவ்வளவு என்றால் ஷீட்டிற்கு எவ்வளவு என்று சொல்ல முடியாது. கிலோவுக்கு ரூபாய் 160/- இருக்கும். ஒரு ஷீட் சாதாரணமாக 1 ½ கிலோ இருக்கும் என்றால் சரியல்ல, 2 கிலோ இருக்கும். பொதுவாக ஒரு சொத்தை ஒத்திக்கோ, பாட்டத்திற்கோ கொடுத்தால் அதற்கு ஒரு ஆவணம் எழுதிகொள்வோம் என்றால் சரிதான். எனக்கு ரப்பர் தோட்டமும் கிடையாது அதை நான் எதிரிக்கு பாட்டமும் கொடுக்கவில்லை என்றாலும் இறந்துபோன நபர் எனக்கு நெருங்கிய உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, அவரை எனக்கு தெரியாது. என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.